## <u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>
## <u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2020–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31–ம் தேதி ( 31.08.2020) திங்கட்கிழமை மாலை 5 . 00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**<u>மன்றபொருள்.1.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு TN-31/AE– 5944 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது மற்றும் 4 டயர்கள் அவசர அவசியம் கருதி பராமரிப்பு பணி மேற்கொண்டதற்கு அங்கீகரிக்கப்பட்ட மகேந்திரா டீலர் SR CAR CARE , No . 5 Bye Pass Road , சிங்காரதோப்பு , சிதம்பரம். அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ. 102710/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2529/2019/இ1)**

**தீர்மான எண் : 107 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றபொருள்.2.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமான மேல்பாதி அம்பேத்கார் நகர் மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி 12.5 HP நீர் மின் மோட்டார் பழுதடைந்ததை அகற்றிவிட்டு ஏற்கனவே அலுவலகத்தில் உள்ள 10 HP மோட்டாரில் உள்ள பொருள்களை எடுத்து அதே 12.5 HP நீர் மின் மோட்டரினுள் பொருத்தி தண்ணீர் சப்ளை செய்து கொடுத்ததிற்கு ரூ.36000 திருமதி . S. பரிமளா அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண். 1751/2020/இ1)**

**தீர்மான எண் : 108 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது.**

**<u>மன்றபொருள்.3.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமான கீழ்பாதி புதுக்குப்பம் ஆழ்துளை கிணறு 12.5 HP நீர் மின் மோட்டார் பம்பு பழுதடைந்ததை பழுது நீக்கம் செய்து மீண்டும் பொருத்தி தண்ணீர் சப்ளை செய்து கொடுத்ததிற்கு ரூ.38000 திருமதி . S. பரிமளா அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண். 1822/2020/இ1)**

**தீர்மான எண் : 109 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது.**

**<u>மன்றபொருள்.4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 13 மேல்நிலை தண்ணீர் தொட்டிகளும் 25 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய மின் மோட்டார்களும் , 15 சிறு மின்விசை பம்புகளும் உள்ளன. இதன் முலம் தினந்தேறும் மோட்டார் பம்புகளை இயக்கி நகரில் காலை, மாலை இரு வேலைகளிலும் குடிநீர் விநியோகம் பொதுமக்களுக்கு சீரான முறையில் தங்கு தடையின்றி செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் குடிநீர் தேக்க தொட்டி காவலர் 5 பேரும் , மின் கம்பியாளர் ஒருவரும் மற்றும் பிட்டர் ஒருவரும் உள்ளனர் . மேற்படி குடிநீர் விநியோக பணிக்கு போதிய பணி ஆட்கள் இல்லை . மேலும் நகரில் உள்ள 48 கி.மீ குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் , குழாய் உடைப்புகள் சரி செய்யவும் , மின் மோட்டார் பம்புகள் பழுதடைந்தால் பழுதுகள் சரி செய்யவும் மேலும் குடிநீர் மேல் நிலை தண்ணீர் தொட்டிகளை சுத்தம் செய்ய போதிய பணியாளர்கள்

இல்லாத காரணத்தால் குடிநீர் பணி தடைபடும் நிலை உள்ளது . எனவே குடிநீர் வியோக அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் மேற்படி பணியை தனியார் மூலம் செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.90 லட்சத்தை குடிநீர் விநியோக நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2095 /2019/இ1)**

**தீர்மான எண் : 110 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றபொருள்.5.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் தனி அலுவலரின் **01.07.2020** தேதிய முன் அனுமதியின் படி 07.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி அலவலகத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் . | 1.50 | திரு.N.சந்திரசேகர் | **0.02 %** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திருமதி. எஸ்.புவனேஸ்வரி | **1.09 %** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.02 %** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.N.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் , நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் . 1722/2020/இ1)**

**தீர்மான எண் : 111 அலுவலக குறிப்பினை ஏற்று குறைவான ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றபொருள்.6.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண் . 029 நாள் . 28.02.2020 அனுமதியின் படி 07.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக போடப்பட்ட நகர்களில் | 7.00 | திருமதி. எஸ்.புவனேஸ்வரி | **0.01 %** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி | | M/s.அருணாச்சல அசோசியேட் | **15.16 %** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு : – 1.வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.01 %** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர் , நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் . 1029/2020/இ1)**

**தீர்மான எண் : 112 அலுவலக குறிப்பினை ஏற்று குறைவான ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது.**

மன்றபொருள்.7. நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் TN-31/ BA 1896 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதில் ஆயில் சர்வீஸ் , கூலண்டு ஆயில் சர்வீஸ் மற்றும் டீசல் பில்டர் , ஆயில் பில்டர் பொருத்தி சரி செய்யப்பட்தற்கு ரூ. 4900/– செலவினம் திரு .P. மணி , ஓட்டுனர் அவர்களால் செலவு செய்யப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது . அதனால் இத் தொகையை திரு .P. மணி , ஓட்டுனர் அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2224/2020/இ1)**

**தீர்மான எண் : 113 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

மன்றபொருள்.8. இந்நகராட்சி பொது சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்காக பயன்படுத்தடுப்படும் 13 BOV வாகனங்களை ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு செய்திடும் பணிக்கு 31.08.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. விபரம் பின்வருமாறு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | AMC தொகை ஒரு வாகனத்திற்கு | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | விக்னேஷ் எண்டர்பிரைசல்,<br>எண்.2 &3, M M காம்ளக்ஸ்,<br>புதுக்கோட்டை ரோடு,<br>திருச்சிராபள்ளி. | ரூ.18,000/–<br>+<br>GST 18% | ரூ.2250/–<br>சலான் எண்.2676,<br>நாள்.28.08.2020 |
| 2 | ஸ்டார் என்ஜினியரிங்,<br>34, புது பாமர் அக்ராகரம்,<br>தாராபுரம்,<br>திருப்பூர் – 638656. | ரூ.16,200/–<br>+<br>GST 18% | ரூ.2250/–<br>சலான் எண்.2678,<br>நாள்.28.08.2020 |
| 3 | D S என்ஜினியரிங்,<br>எண்.180, CSI காலனி,<br>புஞ்சை லக்காபுரம்,<br>ஈரோடு – 638002. | ரூ.14,400/–<br>+<br>GST 18% | ரூ.2250/–<br>சலான் எண்.2674,<br>நாள்.28.08.2020 |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்த புள்ளிகளில் வரிசை எண்.3ல் கண்டுள்ள D S என்ஜினியரிங், ஈரோடு என்கின்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மற்ற இரு ஒப்பந்த புள்ளிகளை விட குறைவாக

உள்ளதினால், அந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிடுவது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்க வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. வரிசை எண்.3ல் கண்டுள்ள D S என்ஜினியரிங், ஈரோடு என்கின்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதினால்,அந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க அனுமதிக்கலாம்.

2. இச்செலவினத்தினை பொது நிதி அல்லது தூய்மை சேவை கட்டண(SUC) நிதியிலிருந்து செலவு செய்திட அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் : 114 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்றபொருள்.9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் வராமல் தடுத்திடும் பொருட்டு வீடுகள் தோறும் கொசு புழுக்கள் உருவாகும் கொள்கலன்களை அழித்திடும் பொருட்டும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், நிலவேம்பு குடிநீர் மற்றும் கபசுர குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கிடவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்களின் அறிவுரைகள் மற்றும் கடிதங்கள் அடிப்படையில் 25 DBC பணியாளர்கள் சுய உதவிக்குழு மூலம் நியமனம் செய்யப்பட்டு பணிக்கு தினமும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவர்களின் அனுமதி 31.08.2020 தேதியுடன் முடிவடைவதாலும், தற்சமயம் பருவமழை துவங்க இருப்பதினாலும், கொசு புழுக்கள் அதிகம் உருவாகும் நிலை உள்ளதினால் 300 குடியிருப்புகளுக்கு 1 DBC பணியாளர் வீதம் 12528 குடியிருப்புகளுக்கு சுமார் 40 பணியாளர்கள் தேவைப்படுகிறது. எனவே, 40 பணியாளர்கள் 01.09.2020 முதல் 31.12.2020 வரை நான்கு மாதங்களுக்கு சுய உதவிக்குழு மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.200/– வீதம் ஊதியம் வழங்கிடவும், நான்கு மாதங்களுக்கு ஊதியத்திற்கான உத்தேச செலவினம் 8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற்று 01.09.2020 முதல் 40 DBC பணியாளர்கள் மூலம் டெங்கு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2015/2017/எச்1)**

**தீர்மான எண் : 115 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை:– எஸ். பிரபாகரன். B.E.**

ந.க.எண்.1029/2020/இ1 நாள்.10.08.2020.

பொருள்:– வேலைகள்– நெல்லிக்குப்பம் நகராட்சி – குடிநீர் நிதியின் கீழ் ரூ .700000/– மதிப்பீட்டில் நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக போடப்பட்ட நகர்களில் குடிநீர் பகீர்மான குழாய் பதித்தல் பணிக்கு உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:– 1. மன்ற தீர்மான எண் . 029 நாள் . 28.02.2020.
2 திருமதி. எஸ்.புவனேஸ்வரி,ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் 07.08. 2019ந் தேதிய குறைந்த ஒப்பந்தப்புள்ளி.
3. தனி அலுவலரின் முன் அனுமதி நாள் . 07.08.2020.

**உத்திரவு:-**

நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ .700000/– மதிப்பீட்டில் நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக போடப்பட்ட நகர்களில் குடிநீர் பகீர்மான குழாய் பதித்தல் பணிக்கு பார்வை 1ல் காணும் மன்ற தீர்மானத்தின் படி ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதிற்கிணங்க பார்வை 2ல் காணும் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பார்வை 3ல் காணும் தனி அலுவலரின் முன் அனுமதியின் படி மேற்படி பணியை செய்வதற்கு இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு 90 நாட்களில் பணியை செய்து முடிக்க இதன் மூலம் உத்திரவு வழங்கப்படுகிறது. மேலும் இவ்வுத்திரவு பெற்ற ஒரு வாரத்திற்குள் ரூ.20.00 மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்தல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. குடிநீர் நிதியின் கீழ் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி பணிகள் செய்யப்பட வேண்டும்.
2. வேலை நடைபெறும்போது அரசால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகளையும்,வழிகாட்டி நெறிமுறைகளையும் தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.
3. பணியின் நிலை குறித்த பணி செய்யும் முன்/பின் புகைப்படம் சமர்ப்பித்தால் தான் இறுதி பட்டியல் வழங்கப்படும்.

ஆணையாளர்
நெல்லிக்குப்பம் நகராட்சி.

பெறுதல்
திருமதி .எஸ்.புவனேஸ்வரி
ஒப்பந்ததாரர்
நெல்லிக்குப்பம்

நகல்:– பொதுப்பணி மேற்பார்வையாளர், நெல்லிக்குப்பம் நகராட்சி.

**<u>நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்</u>**

**<u>முன்னிலை:– எஸ். பிரபாகரன். B.E.</u>**

**<u>ந.க.எண்.1722/2020/இ1</u>** **<u>நாள்.10.08.2020.</u>**

பொருள்:– வேலைகள்– நெல்லிக்குப்பம் நகராட்சி– வருவாய் நிதியின் கீழ் ரூ .150000/– மதிப்பீட்டில் நெல்லிக்குப்பம் நகராட்சி அலவலகத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் பணிக்கு உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:– 1. தனி அலுவலரின் முன் அனுமதி நாள் . 01.07.2020. .
2. திரு.N.சந்திரசேகர், ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் 07.08. 2020ந் தேதிய குறைந்த ஒப்பந்தப்புள்ளி.
3 தனி அலுவலரின் முன் அனுமதி நாள் . 07.08.2020.

**<u>உத்திரவு:-</u>**

நெல்லிக்குப்பம் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் ரூ .150000/– மதிப்பீட்டில் நெல்லிக்குப்பம் நகராட்சி அலவலகத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் பணிக்கு பார்வை 1ல் காணும் தனி அலுவலரின் முன் அனுமதியின் படி ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதிற்கிணங்க பார்வை 2ல் காணும் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பார்வை 3ல் காணும் தனி அலுவலரின் முன் அனுமதியின் படி மேற்படி பணியை செய்வதற்கு இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு 15 நாட்களில் பணியை செய்து முடிக்க இதன் மூலம் உத்திரவு வழங்கப்படுகிறது. மேலும் இவ்வுத்திரவு பெற்ற ஒரு வாரத்திற்குள் ரூ.20.00 மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்தல் வேண்டும்.

**<u>நிபந்தனைகள்</u>**

1. வருவாய் நிதியின் கீழ் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி பணிகள் செய்யப்பட வேண்டும்.
2. வேலை நடைபெறும்போது அரசால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகளையும்,வழிகாட்டி நெறிமுறைகளையும் தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.
3. பணியின் நிலை குறித்த பணி செய்யும் முன்/பின் புகைப்படம் சமர்ப்பித்தால் தான் இறுதி பட்டியல் வழங்கப்படும்.

ஆணையாளர்
நெல்லிக்குப்பம் நகராட்சி.

பெறுதல்
திரு.N.சந்திரசேகர்,
ஒப்பந்ததாரர்

82 , அண்ணா நகர்
நெல்லிக்குப்பம்

நகல்:– பொதுப்பணி மேற்பார்வையாளர், நெல்லிக்குப்பம் நகராட்சி.